ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மானமரும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மானமரும் ॥

## திருச்சாழல்

‡மான் அமரு மென் நோக்கி⋆ வைதேவியின் துணையா⋆
கான் அமரும் கல்லதர் போய்க்⋆ காடுறைந்தான் காணேடீ⋆
கான் அமரும் கல்லதர் போய்க்⋆ காடுறைந்த பொன்னடிக்கள்⋆
வானவர் தம் சென்னி⋆ மலர் கண்டாய் சாழலே (1)

தந்தை தளை கழலத்⋆ தோன்றிப் போய்⋆ ஆய்ப்பாடி
நந்தன் குல மதலையாய்⋆ வளர்ந்தான் காணேடீ⋆
நந்தன் குல மதலையாய் வளர்ந்தான்⋆ நான்முகற்குத்
தந்தை காண்⋆ எந்தை பெருமான் காண் சாழலே (2)

ஆழ் கடல் சூழ் வையகத்தார்⋆ ஏசப் போய்⋆ ஆய்ப்பாடித்
தாழ் குழலார் வைத்த⋆ தயிர் உண்டான் காணேடீ⋆
தாழ் குழலார் வைத்த⋆ தயிர் உண்ட பொன் வயிறு⋆ இவ்-
வேழுலகும் உண்டும்⋆ இடம் உடைத்தால் சாழலே (3)

அறியாதார்க்கு⋆ ஆனாயன் ஆகிப் போய்⋆ ஆய்ப்பாடி
உறியார் நறு வெண்ணெய்⋆ உண்டுகந்தான் காணேடீ⋆
உறியார் நறு வெண்ணெய்⋆ உண்டுகந்த பொன் வயிற்றுக்கு⋆
ஏறி நீர் உலகனைத்தும்⋆ எய்தாதால் சாழலே (4)

வண்ணக் கருங்குழல்⋆ ஆய்ச்சியால் மொத்துண்டு⋆
கண்ணிக் குறுங்கயிற்றால்⋆ கட்டுண்டான் காணேடீ⋆
கண்ணிக் குறுங்கயிற்றால்⋆ கட்டுண்டான் ஆகிலும்⋆
எண்ணற்கரியன்⋆ இமையோர்க்கும் சாழலே (5)

கன்றப் பறை கறங்கக்⋆ கண்டவர் தம் கண் களிப்ப⋆
மன்றில் மரக்கால்⋆ கூத்தாடினான் காணேடீ⋆
மன்றில் மரக்கால்⋆ கூத்தாடினான் ஆகிலும்⋆
என்றும் அரியன்⋆ இமையோர்க்கும் சாழலே (6)

www.prapatti.com

கோதை வேல் ஐவர்க்காய்⋆ மண்ணகலம் கூறிடுவான்⋆
துதனாய் மன்னவனால்⋆ சொல்லுண்டான் காணேடீ⋆
தூதனாய் மன்னவனால்⋆ சொல்லுண்டான் ஆகிலும்⋆
ஓத நீர் வையகம்⋆ முன் உண்டுமிழ்ந்தான் சாழலே (7)

பார் மன்னர் மங்கப்⋆ படை தொட்டு வெஞ்சமத்து⋆
தேர் மன்னர்க்காய் அன்று⋆ தேர் ஊர்ந்தான் காணேடீ⋆
தேர் மன்னர்க்காய் அன்று⋆ தேரூர்ந்தான் ஆகிலும்⋆
தார் மன்னர் தங்கள்⋆ தலைமேலான் சாழலே (8)

கண்டார் இரங்கக்⋆ கழியக் குறள் உருவாய்⋆
வண் தாரான் வேள்வியில்⋆ மண் இரந்தான் காணேடீ⋆
வண் தாரான் வேள்வியில்⋆ மண் இரந்தான் ஆகிலும்⋆
விண்டேழ் உலகுக்கும்⋆ மிக்கான் காண் சாழலே (9)

‡கள்ளத்தால் மாவலியை⋆ மூவடி மண் கொண்டளந்தான்⋆
வெள்ளத்தான் வேங்கடத்தான்⋆ என்பரால் காணேடீ⋆
வெள்ளத்தான்⋆ வேங்கடத்தானேலும்⋆ கலிகன்றி
உள்ளத்தின் உள்ளே⋆ உளன் கண்டாய் சாழலே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com